ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

"நான்" என்ற எண்ணமே உண்மையில் பரிசுத்தமாய், ஸாக்ஷி மாத்திரமாய் நிற்க்கும் கூடஸ்தனாகிய ஆத்மாவாம். இந்த ஆத்மா மூலாக்ஞானமாகிய அவித்தையால் தன் நிஜஸ்வரூபத்தை மறந்துவிட்டது. அக்ஞானத்திற்கு அனேக விசித்திர சக்திகளுண்டு. அவற்றில், ஆவரணம் விக்ஷேபம் என்றிருவித சக்திதான் பிரதானம். அவித்யையின் ஆவரண சக்தியால் தன்னை மறந்தஜீவன் விக்ஷேபசக்தியால் தேஹாதி பாஹ்ய வஸ்துக்களில் தாதாத்மியத்தை யடைகின்றான். அதாவது தேஹாதிகளை நானென்று நினைத்து மயங்குகிறான் "நான் ஜீவித்திருக்கிறேன். நான் இறந்துவிடுகிறேன்" என்ற கொள்கைகளை தன்னுடைய ஸ்வபாவமாகக் கருதுகின்றான். அவித்தையோடு ஸம்பந்தப்பட்ட ஆத்மாவே ஜீவன் ஆகையால் இந்தஜீவனே அக்ஞானம் நீங்கியபோது கூடஸ்தனாகிறான். குருபதேசத்தால், அக்ஞானம் நீங்கி, ஆத்மதரிசனமுண்டாகும்போது இதுகாறும் அக்ஞானாவரணத்தால் ஸத்தியமாய்த் தோன்றியதேகாதிப் பிரமஞ்சமனைத்தும் "கானல் நீர்போலவும்" "கனவு போலவும்" பொய்யாய்ப் போய்விடும் அக்ஞானம் நீங்கப்பெறற ஆத்மாவிற்க்கு மாயை ஒழிந்துவிடுவதால் இவ்வுலகமும் சித்திரத்திலுள்ள உருவங்கள் போலத் தோற்ற மாத்திரமாகவும் சொல் மாத்திரமாகவும் தோன்றிவிடும். குருவருளால் தன் ஆத்மஸ்வரூபத்தைக் கண்டு அதுவே நான் என்ற நிச்சயம் வந்தபின்பே, இவ்வுலகத்தோற்றம் பொய்யென விளங்கும். உலகந்தோன்றும்போதும் உலகை தனக்கு (ஆத்மஸ்வரூபத்துக்கு) அன்யமாய்க்காணும் வரையில் முக்தி கூடாதென்று வேதாந்தஸித்தாந்தம். யாவும் தானாகக் காணுவதும் தன்னையன்றி வேறொன்றுமில்லாததும் கூறவொண்ணாததுமாகிய அகண்டபிரம்மாகாரநிலையை ஸாதனசதுஷ்டயமற்ற மூடர்கள் எவ்வாறு அறிவார்கள்? ஆகையால் த்வைதாத்வைதமதவிவாதத்திலிறங்கி மயங்காமல் ஸமரஸபாவனையுடன் ஸத்குருவினுபதேசத்தால் முமுக்ஷுக்கள் ஆத்மஸ்வரூபத்தை உண்மைமுறையில் விசாரித்தால் க்ஷேமம் பெறலாம்.

बहुशास्त्रकथाकंथारोमन्थेनवृथैवकिम् ।
अत:प्रयत्नात् ज्ञातव्यं तत्वज्ञात्तत्वमान्तरम् ॥

வித்யாரண்யஸ்வாமிகள்

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

# ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-௵ சித்திரை-௴ ௧௨


## தத்வவிசாரம்.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च । रुचीनां वैचित्र्यादृजुकुटिलनानापथजुषां नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णवइव ॥

ஜீவராசிகளை துக்கலேசமுமற்ற சுகத்தில் ஆழ்த்துவதற்காகவே வேதசாஸ்திரங்களும் ஆஸ்திகநாஸ்திக மதங்களும் பிரவர்த்தித்துள்ளன. ஜன்மம், மரணம், ஜரை, ஆதி வியாதி இவைகளால் ஜீவர்கள் துன்புறுவது யாவருக்கும் பிரத்யக்ஷம். ஜன்ம மரணாதிகளை நாம் எவ்வாறு தாண்டுவது, என்பதை ஒவ்வொரு ஜீவனும் உணர்ந்து கொள்ளவேண்டும். இதுதான் சிறந்த தத்வவிசாரம்.

நமது ஹிந்துமத சாஸ்திரங்களில் ஜன்மமரணாதிகளை விலக்கிகொள்வதற்காக கர்மயோகம், பக்தியோகம், அஷ்டாங்கயோகம், ஞானயோகம் முதலிய அனேக உபாயங்களை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஞானயோகமே மேன்மையானது. ஒருவன் ஞானயோகத்தால் ஜன்மமரணாதிகளை வென்றுவிடலாம். பூமியில் ஒருவன் பிறந்தால் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் இது ஒன்றுதான். இதனைப்பார்க்கிலும் அருமையான விஷயம் வேறில்லை. ஞானயோகமென்பதுதான் ஆத்மதத்வ விசாரமாகும். இங்கு ஆத்மதத்வ விசாரத்தைப்பற்றி அதிகமாக நான் பேசவிரும்பவில்லை எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் பேசுவோம்.

வேதங்களில் குருபதேசமூலமாக ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்துவிட்டால் ஜன்ம மரணாதிகளால் சோகமேற்படாதென்று உத்கோஷிக்கப்படுகின்றன. அவ்வாத்மாவிற்கு ஸச்சிதானந்த

மே ஸ்வரூபம். ஆத்மாவிற்கு ஜன்ம மரணாதிகளில்லை. அது நித்யம். அதனால்தான் அதை விசாரிக்கவேண்டும் ஆத்ம விசாரத்தால்தான் ஆத்மானுபவமுண்டாகுமேயன்றி த்வைதிகளும் அத்வைதிகளும் சண்டையிட்டு மண்டையுடைத்துக் கொள்வதாலல்ல. உபனிஷத்துக்களுக்கு த்வைதத்தில் தாத்பர்யமா? அத்வைதத்தில் தாத்பர்யமா? என்ற விஷயத்தின் முடிவைப்பின்பு வைத்துக்கொள்வோம். முதலில் உபனிஷத்திலுரைத்தபடி ஆத்மாவை விசாரிப்போம். இவ்வாத்ம விசாரத்தால் எது ஸித்திக்கின்றதென்று பார்ப்போம்.

நாமிப்போது இருந்துவருகிற நிலைமைக்கு ஜீவிதநிலை என்று பெயர். நாம் ஜீவித்துவருவதற்குக் காரணம் என்னவென்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் இருப்பதற்கும் இறப்பதற்கும் சுவாசந்தான் காரணமென்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சரீரத்தில் பிராணவாயு தங்கியிருந்தால் நாம் நிலை நிற்கிறோம். பிராணவாயு போய்விட்டால் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறோம். ஆகவே இப்பிராணவாயுதான் நமது வாழ்வுக்கு அடிப்படையென்று ஸாமான்யமாய் தோன்றுகின்றது. நம்முடைய பிராணன் உள்பட மன ஆதிகளைத் தாங்கி நிற்பது எதுவோ அதுதான் ஆத்மாவாகும். அவ்வாத்மவஸ்துவை ஆராய்ந்தால்த்தான் த்வைதாத்வைத நிர்ணயம்புலப்படும். ஆனால் ஆத்ம விசாரத்தை நிராகரித்த மதமொன்று கூடவில்லை. யோகசூத்திரக்காரர்களாகிய பதஞ்சலி மகரிஷியும் "ஆத்மஸ்வரூப விசாரத்தை யோகத்தால் செய்யவேண்டும்" என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்.

ஆகவே அவ்வாத்மவஸ்துவை விசாரிக்கும் முறையை முதலிலெவ்வாறு என்று கவனிப்பது அவசியமாகும்.

நான் நான் என்ற எண்ணம் யாவருக்கும் உதிப்பது உண்டு. நானென்ற பதார்த்தம் தான் ஆத்மாவாகும். தானல்லாத அக்ஞானம் முதல் சரீராதிகள் ஈராகவுள்ள பாஹ்யவஸ்துக்களில் நானென்றபாவனை அவிவேகத்தால் ஏற்பட்டுவிட்டது. இவ்விஷயத்தை மூன்று வேதாந்திகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சரீராதிகளில் நான் என்னுடையது என்ற பாவனையை விலக்க வேண்டுமென்பது மதவாதிகளனைவருக்கும் ஸம்மதம். இவ்விஷயத்தை தார்க்கிகர்களும் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆகையால்

அனர்த்த காரணமாகிய சரீராதிகளில் நானென்ற (ஆத்மா வென்ற) எண்ணத்தை அகற்றவேண்டுமென்று ஏற்படுகிறது. சரீராதிகளில் ஆத்மபாவனையை நான் சரீரமல்ல. இந்திரியங்களும் அல்ல, பிராணனுமல்ல மனம், புத்தி, சித்தம், அகங்காரம், மாயை, இவைகளுமல்லவென்றுவிசாரித்துவிலக்கிவிட்டால் மிச்சமாயுள்ள வஸ்து தான் ஸச்சிதானந்தவடிவ ஆத்மா. ஒவ்வொரு ஜீவர்களுக்கும் ஸர்வஞ்ஞானங்களுக்கும் ஸர்வகாரியங்களுக்கும் காரணமாக மனஸ் பிராணன் என்ற இரண்டு தத்துவம் இருக்கின்றது. தந்திக்கம்பியை அறுத்துவிட்டால் தந்தி சலனம் ஏற்படாததுபோல் பிராணன் நின்றுவிட்டால் மனம் முதலிய யாவும் நின்றுவிடும். பிராணனுடன் மனது சேர்ந்தால்தான் பாஹ்ய விஷயங்களை அறியமுடியும். மனத்திற்கும் பிராணனுக்கும் உத்பத்திஸ்தானம் ஒன்றாதலால் மனதை அடக்கினல் பிராணனும் பிராணனை அடக்கினால்மனமுமடங்கும். எப்போது மனம் பாஹ்ய விஷயங்களில் இந்திரிய வாயிலாக செல்கின்றதோ ? அப்போது தான் பிரபஞ்சம் தோன்றுகிறது. அது தோன்றும்போது ஆத்மஸ்வரூபம் பிரகாசிப்பதில்லை. எப்போது மனதை பாஹ்யப்பிரபஞ்சதில் புகாமல் விசாரம் யோகம் இவைகளால் தடுத்துவிடுகிறோமோ அப்போது அந்த மனம் ஆத்மஸ்வரூபத்தை உணர்கிறது. அப்போது பிரபஞ்சம் கொஞ்சமும் புலப்படமாட்டாது. ஆகவே இவ்வுலகமெல்லாம் மனோமயம் மனத்திற்கு எண்ணமே வடிவமாதலால் ஏதாவதொன்றை அவலம்பித்துக்கொண்டேயிருக்கும். எண்ணிறந்த எண்ணங்களை அடக்குதலே சிறந்த யோகமாகும். ஒரே எண்ணத்தில் மனம் நிலைப்பெற பழகுதல் வேண்டும். இது தான்யோகாப்பியாஸம். மனதிலிருந்து 'நான்' என்ற எண்ணம் ஏற்பட்டபின்புதான் வேறு எண்ணங்கள் உதயமாகும். "நான்" என்ற ஒரு எண்ணத்தைக்கொண்டு தான் இதர எண்ணங்களை வெல்லவேண்டும்.

பிராணனையும் மனதையுமொன்றுசேர்த்துப் பழகவேண்டும். மனதைக்கொண்டுதான் பிராணனை வெல்லவேண்டுமேயொழிய ஹடமாகப் பிராணனை நிறுத்தமுயலுதல் அஸாத்தியம். இவ்விஷயம் யோகவாஸிஷ்டத்தில் விரிவாய் காணலாம். மனமொருமுகப்படுவதற்காகவே 'மூர்த்தித்தியானம், மந்திரஜபம்'' முதலிய ஸாதனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனமடங்குவதற்காகவே ஆகார

நியமங்களும் கர்மயோகங்களும் அனுஷ்டிக்கப்படவேண்டும். மனமடங்கினுல் ஸம்ஸாரதுக்கமற்றுவிடும். மனமிறந்துவிட்டு ஜீவித்திருப்பதுதான் "ஜீவன்முக்தி,ஸஹஜஸமாதி,ஆத்மார்ப்பணம் ஆத்மநிஷ்டை" என்ற சொற்களால் வழங்கப்படுகிறது.

மனத்தை அடக்குவதற்கு வைராக்கியம் அப்யாஸம் இவ்விரண்டுந்தான் முகதற்காரணம், மற்ற உபாயங்களால் மனம் கொஞ்சகாலமடக்கப்பட்டதுபோல் விளங்கி மீண்டும் வெளி விஷயங்களில் சென்றுவிடும். எவ்விதம் நல்ல முத்துக்களைத் தேடி எடுப்பதற்கு கல்லை இடுப்பில் கட்டிக்கொண்டு ஸமுத்திரத்தில் மூழ்கவேண்டுமோ அவ்வாறே முமுக்ஷுக்களும் இவ்வாத்ம முத்தை தேடிக்கண்டெடுப்பதற்காக வைராக்கியமென்ற கல்லைக் கட்டிக்கொண்டுதான் சரீரத்துக்குள்ளே முழுகவேண்டும்.

ஆகவே வைராக்கியபூர்வகமாக யோகாப்யாஸம் செய்வதால் தான் ஆத்மஞானமுதிக்கும். இவ்விதமாக ஏகாந்த ஸ்தானத்தில் அமர்ந்துகொண்டு ஆத்மவிசாரம் செய்வதாலும் யோகாப்யாஸ மூலமாகவும் தீர்மானிக்கப்படுமாத்மஸ்வரூபத்தில் தேஹாதிபாஹ்ய ப்ரபஞ்சம் தோன்றுவதற்கு சிறிதும் நியாயமில்லை. சரீராதிகள் அந்த ஸமாதிநிலையிலும் புலப்படலாமென்றுல் அவர்கள் யோகிகளேல்ல, போகிகளேயாவர். 'அஸம்பிரக்ஞாத' ஸமாதியை அங்கரிக்காமலுமிருக்கும்படியும் நேரிடும் யோசசாஸ்திரங்களை எப்படி வீணில் அப்பிரமாணம் என்று ஒப்புக்கொள்வது ?

சரீரத்துக்குள் பிரகாசிக்குமாத்மாவை ஸகுணம் என்றே அல்லது நிர்குணமென்றே வீண்சாஸ்திரசர்ச்சையால் தீர்மானித்துவிடமுடியாது. சாஸ்திரகிரந்தங்களெல்லாம் பஞ்சகோச பாஹ்யங்களல்லவா? பஞ்சகோசங்களுக்குள் விளங்குமாத்மஸ்வரூபத்தை மேற்கண்ட விசாரங்களால் தெரிந்துகொள்ளலாமேயொழிய 'ஜல்ப' கதையாலில்லை. ஸம்ஸாரபந்தமெவனுக்கோ அவனுக்குத்தான் மோக்ஷமென்பது. தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்தால் 'என் மதம், உன் மதம்' என்ற சண்டையெல்லாங்கூட அழிந்துவிடும். அவிவேகத்தால்தான் சண்டையிட ஆரம்பம் செய்வது— மதத்தில் சண்டையிடுவதற்கு வாதிகளையழைப்பதைக்காட்டிலும் தம் தம் மததத்துவங்களை நன்கு உணர்ந்து அதன்படி அனுஷ்டிக்கமுற்படுவதுதான் விவேகிகளுக்

கழுது, காமக்குரோதங்களை விருத்தியடையும்படி செய்துகொள்ள ஒருமதமும் இடங்கொடுப்பதில்லை. விவேகிகள் கோபித்தவர்களையுமதிகமாக நேசிப்பார்களேயொழிய த்வேஷிக்கவேமாட்டார்கள். ஏனெனின் அவர்கள் விசாரத்தால் ராகத்துவேஷங்களை வென்றவர்கள்.

ஆகவே யாவரும் வேதங்களில் கூறியுள்ளபடி குருமுகமாக ஆத்மவிசாரம் செய்ய ஆரம்பித்தால் அப்போது பின்பு எது ஏற்படுகிறதென்று தீர்மானித்துக்கொள்ளலாம். ஆத்மாவைப்பார்த்துவிட்டால் பார்த்தவன் பரமாத்மாவோடு கலந்துவிடுவான். அப்போது சண்டையிடுபவனும் சண்டையும் பிரதிவாதியும் இல்லவே இல்லை. அப்போது மஹாமௌனநிலை ஏற்படும், இதுதான் பரமார்த்தம், வீணில் சண்டையிடாமல் காலத்தையுங்கழிக்காமல் கொஞ்சங்கொஞ்சமாக ஸத்குருபதேசங்களைப்பெற்று ஆத்மஸ்வரூபவிசாரம் செய்யும்படி வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாஸகர்.

---

# அத்வைத மதம் வைதிகம்.

(257-வது பக்கத்தொடர்ச்சி)

இதுகாறுங்கூறியவற்றால் கல், முள்ளு காஞ்சகட்டை முதலியதில் துக்கபாவமிருந்தாலும் சுகமில்லாததால் துக்காபாவமே சுகமென்று சொல்லவியலாது. துக்கபாவத்தைக் காட்டிலும் வேறாய் பாவவஸ்துவாய் அதனாலேயே உயர்வு தாழ்வு முதலிய தர்மங்களையுடையதாய்த்தான்விளங்குவதற்கு துக்காபாவத்தைச் சேஷமாய்க் கொண்டதாயுள்ள சுகமே முக்கியமான புருஷார்த்தம் என்று ஸித்தித்தது.

இவ்வித சுகத்தை விரும்பியே,

फलेच्छा उपायेच्छां प्रतिकारणम् ।

"சுகமாகிய பிரயோஜனத்தின் ஆசையே அதற்குச் சாதனமாய் உள்ள வஸ்துவின் ஆசைக்குக் காரணம்" என்று கூறியவாறு

சுகத்தின் ஸாதனங்களாகிய (காரணங்களாகிய) பொருள்களையும் விரும்பி அச்சாதனங்களை அனுஷ்டிக்க ஸகலமான ஜீவர்களும் முயலுகின்றனர். ஆகையால் ஒவ்வொரு மனுஷ்யர்களுடைய பிரவிருத்திக்கும் இது சுகத்திற்குச் சாதனமென்னும் ஞானமே காரணமாம்.

துக்கத்தின் அபாவத்திற்குச் சாதனமாயுள்ள விஷயங்களும் அங்கு துக்காபாவத்தால் விளங்கும் சுகத்திற்கும், துக்காபாவத்தின் துவாரா்வாக ஸாதனங்களாவதால் அவ்விடத்திலும் இது துக்காபாவத்திற்குச் சாதனம் என்னும் மற்றொரு ஞானமும் தனிக்காரணமென்று ஒப்புக்கொள்ளாது இது சுகத்திற்குச்சாதனம் என்றும் ஞானமாகிய ஒரே காரணத்தைக் கொண்டே பிரவிருத்தியானது ஏற்படுவது பொருந்துமாதலின் மனுஷ்யர்களுடைய எவ்விதமான பிரவிருத்திக்கும் இது சுகத்தின் சாதனம் அறிவே காரணமாயிற்று.

இவ்விதமே துக்கத்தை வெறுத்தே

फलद्वेषः उपायद्वेषं प्रतिकारणम् ।

"துக்கமாகிய பயனில் வெறுப்பே அதற்குச் சாதனமாயுள்ள வஸ்துவின் வெறுப்பிற்குக் காரணம்" என்று கூறியவாறு துக்கத்தின் ஸாதனங்களை வெறுத்து அச்சாதனங்களை விலக்க ஸகலமான ஜீவர்களும் முயலுகின்றனர். ஆகையால் ஒவ்வொரு மனுஷ்யர்களுடைய நிவிருத்திக்கும இது துக்கத்திற்குச் சாதனமென்னும் ஞானமே காரணமாம். இவ்விஷயத்தையே,

सुखार्थास्सर्वजन्तूनां याश्चकाश्चित् प्रवृत्तयः । नकदाचनदुःखार्थाः

"ஸர்வஜந்துக்களுடையவும் எவ்விதமான பிரவிருத்திகளும் சுகத்திற்காகவே ஒருபொழுதும் துக்கத்திற்காக இல்லை" என்னும் வசனத்தால் சான்றோர்கள் சாற்றியிருக்கின்றார்கள்.

எந்த விஷயத்தில் இது சுகத்திற்குச்சாதனமென்றோ அல்லது துக்கத்திற்குச் சாதனமென்றோ அறிவு உண்டாகவில்லையோ அந்த விஷயத்தில் மனுஷ்யர்களுக்குப் பிரவிருத்தியோ நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. ஆனால் உபேக்ஷை ஏற்படுகின்றது. உபேக்ஷையாவது இதுவேண்டுமென்று எடுக்கவோ, இது கூடாது என்று விலக்கவோ முயற்சிக்காமல் உதாஸீனமாயிருத்தல்.

உதாஹரணம் ஆஹாரம் முதலிய விஷயத்தில் இது சுகஸாதனமென்றுந்தோற்றத்தினால் அதைச் செய்வதற்கு ஜனங்கள் பிரவர்த்திக்கிறார்கள். பாம்பு, தேள், முதலிய விஷயத்தில் இது துக்கஸாதனமென்றுந் தோற்றினால் அதை விலக்கயத்தனிக்கிறார்கள். நடக்கும்பொழுது வழியில் புல், பூண்டு முதலிய சுகஸாதனங்களாகவோ துக்கஸாதனங்களாகவோ இல்லாத உதாஸீனப் பொருள்களைக் கண்டால் அவைகளை எடுக்கவோ விலக்கவோ முயற்சிக்காமல் உபேக்ஷயாய் உதாஸீனம் செய்கின்றார்கள்.

அற்றேல் சிலவிஷயங்களில் இதுசுகத்திற்குச்சாதனமென்று தெரிந்திருந்தாலும் ஜனங்கள் அதில் பிரவர்த்திக்கிறதில்லை. அஃதென்னவெனில் மது விஷ ஸம்பிருக்தான்னம் (தேனும் விஷமும் கலந்த அன்னம்)] அவ்விதவிஷம்கலந்த மதுரபதார்த்திங்களை புஜித்தால் அவை தத்காலம் புசிப்பதற்கு ருசிகரங்களாயிருந்து பசியை நீக்கிச் சுகத்தைக் கொடுப்பவைகளாயிருந்தாலும் அவைகளைப் புசிக்கிறதில்லை. ஆகையால் இது சுகத்திற்குச் சாதனம் என்றும் ஞானம் பிரவிருத்திக்குக்காரணமென்பது பொருந்தாது.

இவ்விதமே சில விஷயங்களில் இது துக்கத்திற்குச் சாதனமென்று தெரிந்தாலும் ஜனங்கள் அதிலிருந்து நிவிருத்திக்கிறதில்லை. அஃதென்னவெனில் ஆமணக்கெண்ணை ஆப்ரேஷன் இங்கிலீஷ்படிப்பு; அதாவது ஆமணக்கெண்ணை முதலிய பதார்த்தத்தைக் குடித்தால் அது தத்காலம் குடிப்பதற்கு அரோசகமாய் அருவருப்பை உண்டுபண்ணி துக்ககரமாயிருந்தாலும் அதைக் குடிக்காமல் விலக்குகிறதில்லை. இவ்விதமே பொறையோடிய சிறங்கு முதலியதுகளை டாக்டர் மூலம் ஆப்ரேஷன் செய்தால் அதனால் துக்கமேற்படுவதாயிருந்தாலும் ஆப்ரேஷன் செய்யாமல் இருக்கிறதில்லை. இதுபோல் உலகில் பிராமண குலத்திலுதித்தவர்களுள் பெரும்பாலார்த் தமது குமாரர்களைக் காலத்தில் விதி தவறாது சௌளம் உபனயனம் முதலிய சாஸ்திரங்களில் கூறிய ஸம்ஸ்காரங்களைச் செய்து குருகுலமனுப்பி பிக்ஷாசரணம் முதலிய நியமங்களுடன் பணச்சிலவு, சாப்பாட்டுச் சிலவு சரீரசிரமம் முதலியதில்லாமல்,

ब्राह्मणेनानिष्कारणं षडङ्गोवेदोऽध्येयोज्ञेयश्च ।

"பிராமணனால் ஒருவித பயனையும் கருதாது ஆறு அங்கங்களு

டன் வேதமானது அத்யயனம் (குரு சொல்லியதை அனுசரித்து சொல்லுதல் செய்யத்தக்கது. அர்த்தத்துடனுமறியத்தக்கது" என்பது முதலிய வசனங்களால் அவசியம் கற்கவேண்டியதாய் சொல்லப்பட்ட ஐஹிகம் ஆமுஷ்மிகம் மோக்ஷம் ஆகிய ஸகல பயன்களையும் அளிக்கவல்லமை வாய்ந்த வேதம் வேதாங்கள் ஸ்மிருதி புராணேதிஹாஸாகமங்கள் முதலிய உயர்ந்த கலைகளைக் கற்கவிடாது தாமும் சாஸ்திரங்களில் தடுக்கப்பட்ட பலவித வழிகளில் எப்படியோ வெகு பாடுபட்டுச் சரீர சிரமத்துடன் தம்முடைய சரீரபோஷணத்தைக் கூட ஸரிவர நடத்தாமல் பணத்தைச் சம்பாதித்து அவ்வித பணங்களை குமாரர்கள் படிக்கும் ஹைஸ்கூல் காலேஜ் முதலிய ஹூணவித்யாசாலையின் சம்பளத்திற்கும் ஒருவன் படித்த புஸ்தகம் மற்றொருவனுக்கு உபயோகப்படாது. வருஷந்தோறும் மாறிமாறிக் கொண்டே வந்துகொண்டிருக்கும். புஸ்தகங்கள் காகிதம், பேனு, மசிக்கூடு, ரப்பர், சாக்கட்டி, தலைப்பா, முதலிய கணக்கிலகப்படாத ஸாமான்களை வாங்குவதற்கும் ஹாஸ்டல், காப்பிஹோட்டல் முதலிய போஜனசாலைகளில் ஜாதிபேதமில்லாது பலவித ஸ்னேஹிதர்களுடன் ஸமபங்தியில் உட்கார்ந்துகொண்டு விதிவிலக்குகளை விலக்கி வேண்டிய ஆஹாரங்களைப் புஜித்து வயிற்றை ரொப்புவதற்கும் பணமறுப்பும் தகப்பன் சிரமமறியாத பிள்ளைகள் மற்றுமுள்ள ஸ்னேஹிதர்களுடன் கூடி ஸோடா, கலர், முதலிய ஹீனஜாதிகளால் ரொப்பப்பட்ட பலவித அசுத்தமான ஜலங்களைப் பலவித ஜாதி மனுஷ்யர்களின் வாயில் வைத்துக் குடிக்கப்பட்டு உச்சிஷ்டங்களாய்ப் பரம அசுத்தங்களாய் உள்ளபாட்டில்களின் மூலம் பானம்செய்து கொண்டும் தனக்குச் சொன்னபடி கேழ்க்கக்கூடிய குடுமியொன்றை தன்னிஷ்டப்படி கிராப் முதலியதுகளால் கத்தரித்துத் தனது அலங்காரங்களாய்த் தோன்றும் அலங்காராபாஸங்களைச் செய்துகொண்டு நாடகலக்ஷணம் சிருங்காராதி நவவிதரஸங்களின் இலக்கணம் முதலியது இன்னதென்றே தெரியாதவர்களும் சொல் சாதுர்யம், கானசாதுர்யம், நடனசாதுர்யம், முதலிய அங்கங்களே அமையப் பெறாதவர்களுமாயுள்ள வேஷதாரிகளால் நடித்துக் காட்டப்படும் விசேஷமாய் ரஸாபாஸங்களையே பெரும்பாலும் உடையதும் வர்ணாசிரம தர்மவிரோதி வாஸனையைப் புகட்டுவதுமான காலத்திற்குத் தகுந்த கோலமாயமைந்த மேல்நாட்டு நாக

ரீகாபாஸம் கலந்த நாவல் முதலிய நாடகாபாஸங்களையும், ஸினிமா, ஸர்க்கிஸ், முதலியதுகளையும் விநோதசாலைகளில் போய்ப் பார்க்கச்செய்யும் சிலவுகளுக்கும் இவ்விதம் எண்ணிலகப்படாத சிலவுகளுக்குச் சிலவழித்து

न म्लेच्छितवैनापभाषितवै म्लेच्छोहवा एषयदपशब्दः ।

"அபசப்த ரூபங்களாயுள்ள பாஷாந்தரங்களை உச்சரிக்கக்கூடாது என்னும் வசனங்களால் பிராமணர்களுக்கு விசேஷமாய் சாஸ்திரங்களில் உச்சரிக்கக்கூட கூடாது என்று தடுக்கப்பட்டதும் ஐஹிகமாகிய பிரயோஜனத்தை மாத்திரம் கொடுத்தால் கொடுக்கக் கூடியதும் லெட்ரேசர் லாங்வேஜி முதலிய சரித்திர நூல்கள் பாஷாதத்துவ நூல்கள் முதலியவற்றால் ஆர்யர்களால் அனாதிகள் அபௌருஷேயங்கள் என்று கருதப்படும் வேதங்களுக்குக் கூட ஸமீபகாலத்தில் சிற்சிலர்களால் இயற்றப்பட்ட தன்மையையும் ஹூணர்கள் ஆர்யர்கள் முதலியவர்கள் ஆதியில் ஒரே தேசத்தில் பரஸ்பர ஸஹோதரர்களாயிருந்து ஏதோ சில அஸௌகர்யங்களால் அங்கிருந்து வெளிக்கிளம்பிப்போனதில் ஸிந்துநதிக்கரையின் வழியாக இந்தியாவில் பிரவேசித்த சிலர்கள் பிராமணர் க்ஷத்திரியர் வைச்யர் முதலிய ஜாதிபேதங்களைத் தொழிலின் மூலம் ஏற்படுத்திக்கொண்டு அதற்குரிய வர்ணாசிரமதர்மங்களையும் ஏற்படுத்திக்கொண்டு ஸ்மிருதிபுராணம் முதலிய பலவித நூல்களையும் தமக்கனுகுணமாய்க் கல்பித்துக்கொண்டு தற்காலத்தில் சீர்திருத்தக் காரர்களால் உலகமெங்கும் பிரசுரிக்கப்படும் நாகரீகம்என்று அவர்களால் கருதப்படும் நாகரீகாபாஸங்களில்லாதவர்களாய் விளங்குகிறார்கள் என்பதையும் இதுபோன்ற பொய்யான விஷயங்களை உண்மைபோல் போதித்து பிராமணகுலத்தில்பிறந்ததினால் அனாதியாய் ஏறியிருக்கும் வர்ணாசிரமதர்மவாஸனைகளை அடியோடு வேரறுத்து "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" "பாலப்பருவத்திற் கற்குங் கல்வியே பசுமரத்தாணி பாறையிலெழுத்து" என்பதுபோல் பால்யத்திலேயே வர்ணாசிரம தர்ம விரோதி துர்வாஸனைகளை ஏத்தியதால் அது பிறகு எவ்வித பெரியோர்களுடைய ஸதுபதேசங்களைக்கேட்டாலும் மாறாது यत्रस्वप्रतिभामानं எந்தக்கலியில் தனது புத்தியே பிரமாணமோ என்றபடி தன் புத்

தியையே பரமப்ரமாணமாக நினைத்து வர்ணாச்ரம தர்மங்களையும் அவற்றின் பிரமாணங்களாகிய வேதம் முதலிய சாஸ்திரங்களையும் அதை ஓதும் பிராமணர்களையும் அலக்ஷ்யம் செய்து ஐஹிகம் ஆமுஷ்மிகம் மோக்ஷம் ஆகிய ஸகலவிதமான சிரேயஸ்ஸுகளையும் அடையவிடாது அடியோடு கெடுத்துவிடுவதும் இவர் குருவா அல்லது அவர் குருவா என்று குரு சிஷ்யர்களுள் வேற்றுமை கண்டுபிடிக்கக் கூடாததுமான இங்கிலீஷ் முதலிய பாஷைகளைப் படிக்கவைப்பதில் கீழ்க்காட்டிய பலவித துக்கங்களிருந்தும் அவ்வித துக்கஸாதனமான விஷயத்திலிருந்தும் விலகுவதில்லை.

ஆகையால் இது துக்கத்திற்குச் சாதனமென்றும் ஞானம் நிவிருத்திக்காரணம் என்பது பொருந்தாது என்னும் கேள்விகளுக்கு இது ஸமாதானம். இது சுகமாகிய இஷ்டத்திற்குச் சாதனம் என்றும் ஞானம் ஒன்றே தனியாய்ப்ரவர்த்திக்குக்காரணம் அன்று. பிள்ளையோவெனில் இது பிற்பட்டு பிரபலமாகிய(ஸகிக்க முடியாத) துக்கமென்றும் அனிஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது என்றும் ஞானத்தின் இல்லாமையாகிற ஸஹகாரி காரணத்தோடு கூடியே இது இஷ்டஸாதனம் என்றும்ஞானம் பிரவிருத்திக்குக் காரணம். தேனும் விஷமும் கலந்த அன்னமாகிய மதுரவஸ்துவில் இதை உட்கொண்டால் இது பிற்பட்டுப்பிரபலமான மரணம் என்னும் அனிஷ்டத்தைக் கொடுக்கும் என்னும் ஞானமிருப்பதால் அதன் இல்லாமையாகிற ஸஹகாரி காரணமில்லாததால் கேவலம் இது சுகஸாதனம் என்னும் ஞானம் பிரவர்வர்த்தியை உண்டுபண்ணுகிறதில்லை. அவ்விதமே இது துக்கமென்றும் அனிஷ்டத்திற்குச் சாதனம் என்னும் ஞானம் ஒன்றே தனியாய் நிவிருத்திக்குக் காரணமன்று. பிள்ளையோவெனில் இது பிற்பட்டு பிரபலமாகிய (உயர்ந்த) சுகமென்னும் இஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது என்னும் ஞானத்தின் இல்லாமையாகிற ஸஹகாரிகாரணத்தோடு கூடியே இது அனிஷ்டஸாதனமென்னும் ஞானம் நிவிருத்திக்குக் காரணம். ஆமணக்கெண்ணை குடிப்பது ஆப்ரேஷன்செய்துகொள்வது முதலியதில் நாம் இதை செய்தால் இது பிற்பட்டு பிரபலமான சரீராரோக்யம் முதலிய இஷ்டத்தைக் கொடுக்கும் என்னும் ஞானமிருப்பதால் அதன் இல்லாமையாகிற ஸஹகாரிகாரணமில்லாததால் கேவலம் இது துக்கஸாதானம் என்னும் ஞானம் நிவிருத்தியை உண்டுபண்ணுவதில்லை. அவ்விதமே பிள்ளைகளை

இங்கிலீஷ் முதலிய நிஷித்த பாஷைகளைப் படிக்க வைப்பதில் இது தத்காலம் கஷ்டமாயிருந்தாலும் பிற்பட்டு பிரபலமான உத்யோகம் முதலிய இஷ்டத்தை ஒரு ஸமயம்கொடுக்கலாம் என்னும் ஸம்பாவனுஞானமும் அவ்விதம் உத்தியோகம் பெற்ற பிள்ளைகள் ஒரு ஸமயம் பெற்றோர்களாகிய நம்மைப் பிறகு காப்பாற்றலாம் என்னும் ஸம்பாவனு ஞானமும் இருப்பதால் அதன் இல்லாமையாகிற ஸஹகாரிகாரணமில்லாததால் கேவலம் இது துக்கஸாதனமென்னும் ஞானம் நிவிருத்தியை உண்டுபண்ணுகிறதில்லை. ஸம்பாவனு ஞானமாவது இது தூண் என்று ஒரு கோடியையேபுடைய நிச்சயமென்னும் ஞானத்திற்கு வேறாய் இது தூணு அல்லது புருஷனு என்று ஸமநிலையிலுள்ள இரண்டுகோடிகளையுடைய ஸம்சயமென்னும் ஞானத்திற்கும் வேறாய் தூரத்திலிருப்பது அனேகமாய் தேவதத்தனயிருக்கலாம் என்று இரண்டு கோடிகளுள் ஒருகோடி முனைத்தும் மற்றொருகோடி அதற்கு மாறாகவும் இருக்கும் ஞானம் உத்யோகம் பெறலாம் பிள்ளைகள் காப்பாற்றுவார்கள் என்கிற ஞானம் தற்காலம் நிச்சயமாகாது ஸம்பாவனு ஞானமே. ஆகையால் இது பிற்பட்டு பிரபலமான துக்கத்திற்குச் சாதனமென்னும் ஞானமில்லாமலிருப்பதோடு இது சுகத்திற்குச் சாதனம் என்னும் ஞானம் பிரவிருத்திக்குக் காரணம். அதுபோல் இதுபிற்பட்டுப்பிரபலமான சுகத்திற்குச் சாதனமென்றும் ஞானமில்லாமலிருப்பதோடு இது துக்கத்திற்குச் சாதனமென்னும் ஞானம் நிவிருத்திக்காரணம் என்று முடிவாயிற்று.

சுகத்திலும் அதன்மூலமாகச் சுகஸாதனங்களிலும் ஸர்வ பிராணிகளுக்குமிருக்கும் ஆசையே சுகம் விளங்குவதற்குத் துக்கம் இடையூறாயிருப்பதால் துக்கத்தையும் அதன்மூலமாக துக்கஸாதனங்களையும் வெறுப்பதற்குக் காரணம். அவ்விதமான சுகத்தின் ஆசையே ஸுகத்தைக்கொடுக்காத உதாஸீனப்பொருள்களை உபேக்ஷை செய்வதற்கும் (அலக்ஷ்யம் செய்வதற்கும்) காரணம். ஆகையால் ஹானம் (விலக்குவது) உபாதானம் (எடுப்பது) உபேக்ஷை (உதாஸீனமாயிருப்பது) என்றும் மூன்றுவிதமான வியவஹாரங்களுக்கும் மூலகாரணம் சுகத்தில் வைத்திருக்கும் நிரதிசயமான ப்ரீதியே என்பது எல்லோராலும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்

नहि कश्चित्क्षणमपि जातुतिष्ठत्यकर्मकृत् ।
कार्यतेह्यवशःकर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥

"அஜ்ஞானியாய் இந்திரியநிக்ரஹம் செய்யாதவனான ஒரு மனுஷ்யனும் ஒரு ஸமயமும் ஒரு க்ஷணநேரங்கூட லௌகிகமோ வைதிகமோ ஏதாவது ஒரு கர்மாவைச் செய்யாமலிருக்கிறதில்லை. ஏன் என்றால் ஸமஸ்தமான பிராணியும் பராதீனமாய்க்கொண்டு மூலப் பிரகிருதியாகிய மாயையினின்றும் கார்யவடிவமாய்த் தோன்றிய ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களினால் அல்லது ஸ்வபாவத்தினால் ஏற்பட்ட ராகம் துவேஷம் முதலிய குணங்களினால் லௌகிகமோ வைதிகமோ ஏதாவது ஒரு கர்மாவைச் செய்விக்கப் படுகின்றது" என்று பகவத்கீதையில் பகவான் அருளியபடி ஸமஸ்தமான மனுஷ்யர்களும் ஓய்சல் ஒழிவில்லாமல் ஏதாவது வேலை செய்துகொண்டே இருக்கிறார்கள் என்பது உலகானுபவம். அவ்விதம் வேலை செய்வதற்கெல்லாம்

प्रयोजनमनुद्दिश्यनमंदोपि प्रवर्तते ।

"பயனைக்கருதாது மந்தனும் பிரவிருத்திக்கிறதில்லை" என்றபடி உத்தேச்யமாயுள்ள பயன் இந்த சுகமே.

இவ்விதம் எல்லோராலும் ஸ்ரக் (ஹாரம்) சந்தனம் வனிதை (ஸ்திரீ) முதலிய விஷயங்கள் அதனால் ஏற்படும் சுகத்தின் ஆசையினால் ஆசைப்படத்தகுந்தவைகளாய் சுகம் ஏற்படாத காலத்தில் இச்சிக்கப்படாதவைகளாயிருப்பதுபோலில்லாமல்

इतरेच्छानधीनेच्छा विषयत्वं सुखस्यलक्षणम् ।

"மற்றொரு வஸ்துவின் ஆசைக்கு அதீனமாயில்லாத ஆசைக்கு விஷயமாயிருத்தல் சுகத்திற்கு இலக்கணம்" என்று தார்க்கிகர்கள் கூறியபடி வேறொரு வஸ்துவின் ஆசையைமுன்னிடாத ஆசைக்கு விஷயமாய் சந்தனம் முதலியது எதற்காக என்னும் வினாவுக்கு அதனால் ஏற்படும் சுகத்திற்காக என்று விடையளிப்பதுபோல் சுகம் எதற்காக என்னும் வினாவுக்கு இன்னத்திற்காக என்று விடையளிக்கமுடியாமல் ஸுகத்திற்காகத்தான் என்று அதையே அதற்குப் பிரயோஜனமாக விடையளித்து அதனால் வேறொரு பிரயோஜனத்திற்காக இல்லையென்று கருதப்படக்கூடியதாய் எப்பொழுதும் ஆசைப்படக்கூடியதாய் இருக்கும் சுகமே முதலா

சைக்கு விஷயமாய் அதனுல் முதலாவதாய் முக்யமாயுள்ள புருஷார்த்தம். அவ்வித சுகத்திற்குச் சாதனமாய் சுகத்தின் ஆசையினுல் ஆசைப்படக்கூடியதாய் சுகத்தைக் கொடுக்குங்காலத்தில் ஆசைப்படப்பட்டு மற்ற காலத்தில் ஆசைப்படாததாய் இருக்கும் சுகஸாதனம் இரண்டாவது ஆசைக்கு விஷயமாய் அதனுல் இரண்டாவதாய்க் கௌணமாயுள்ள புருஷார்த்தம். ஆகையால் சுகம் முக்ய புருஷார்த்தம், சுகசாதனம் கௌணபுருஷார்த்தம் முதலில் முக்யகௌணப்பிரிவினுல் இரண்டுவிதமாகப் பிரிவை அடைந்தது. மறுபடியும் முக்யமாகிய சுகம் காமம் மோக்ஷம் என்று இரண்டு விதமாகவும் கௌணமாகிய சுகசாதனம் தர்மம் அர்த்தம் என்று இரண்டுவிதமாகவும் பிரிவை அடையும்பொழுது முதலில் முக்யம் கௌணம் என்று இரண்டுவிதமாய்ப் பிரிவையடைந்த புருஷார்த்தமே முக்யத்தின் இருபிரிவையும் கௌணத்தின் இருபிரிவையும் சேர்த்து தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று நான்குவிதமாய்ப் பிரிவை அடைந்தது. இந்நான்கையும் தமிழில் முறையே அறம் பொருள் இன்பம் வீடு என்று வியவஹரிக்கின்றுர்கள்.

இனி தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று கிரமத்தை (முறையை) ஏற்படுத்தி அர்த்தம் தர்மம் என்பது முதலிய பலவித கிரமத்தை உபயோகப்படுத்தாமல் வியவஹரிக்கும் சாஸ்திரங்களுக்கும் பெரியோர்களுக்கும் என்ன அபிப்ராயம் என்பதை அவச்யம் விசாரிக்கவேண்டிய உயர்ந்த விஷயமானதால் கொஞ்சம் விசாரிப்பாம்.

இவ்விதமான கிரமத்தாலேயே சாஸ்திரங்களும் பெரியோர்களும் உண்மையையும் மனுஷ்யர்கள் நடக்கவேண்டிய ரீதிகளையும் ஆழ்ந்த கருத்தினுல் விளக்கியிருக்கிறுர்கள். இக்கிரமத்தின் ஆராய்ச்சியினுலேயே ஸகலமான மனுஷ்யர்களும் உண்மையை அறிந்து அதுவழி நடந்து ஸகலமான சிரேயஸ்ஸுகளை அடையக்கூடும் என்பது எனது சிற்றறிவில் தோன்றிய துணிபு.

(தொடரும்)

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரி.

# ஹிந்து மதாபிமான ஸங்கம்
## நாகப்பட்டணம்.

நாகப்பட்டணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதர வில் திருவையார் சாஸ்திர ரத்னாகரம் பிரம்மஸ்ரீ விசுவநாதசாஸ்திரிகள் அவர்களால் 31-3-31, 1-4-31, 2-4-31, தேதிகளில் ஸம்ஸ்காரங்கள், பக்தி, ஆத்மஞானம் என்னும் விஷயங்கள் முறையே உபன்யசிக்கப்பட்டன. சாஸ்திரிகள் அவர்கள் மனிதனுக்கும் ஸம்ஸ்காரங்கள் அத்யாவசியம் என்றும், மொரத்தாகாரமாக இருக்கும்படியான ரத்னத்தை நன்கு சோதித்து சரியானபடி வெட்டி தேய்த்து மெருகு கொடுத்து பளபளப்புக் கொடுப்பதுபோல ஒவ்வொருவரும் தன்னுடைய மனதை ஸம்ஸ்காரங்களால் நன்றாக சுத்தம் செய்து பரம ஸாத்விகத்தையும் தேஜஸ்ஸையும் விருத்தி செய்து கொள்ளவேண்டுமென்றும், 48-ஸம்ஸ்காரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் அவைகளை வர்ணாச்ரம தர்மங்களுக்கு உரித்தபடி அனுஷ்டிக்கவேண்டுமென்றும் அந்த அனுஷ்டானங்களுக்கு காலம் முக்கியமென்றும் குறித்த காலங்களில் அனுஷ்டிக்கப்படும் ஸம்ஸ்காரங்களுக்கே பலன் உண்டென்றும் ஸம்ஸ்காரங்களால் நன்றாக திருடப்படுத்தப்பட்ட மனதில் ஏற்படும் ஈசுவர பாவனையே பக்தியென்றும் ஒவ்வொருவரும் தன்னுடைய மனோ விருத்திக்குத் தகுந்த தேவதையை இஷ்டதேவதையாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் அவரவர்களுடையபரிபாகத்திற்குத் தகுந்தபடி சாலோக்யம் சாமீப்யம் சாரூப்யம் சாயுஜ்யம் முதலிய பலன்கள் சித்திக்கிறதென்றும் ஆத்மஞானம் அநுபவைகவேத்ய மென்றும்வாக்குக்கெட்டாததாக ச்ருதிகளாலேயேபிரதிபாதிக்கப் பட்டிருக்கிறதென்றும் சொல்லி சாந்தோக்ய பிரஹதாரண்யக உபனிஷத்துக்களிலிருந்து இந்த்ர விரோசனோபாக்யானம் பிராணோபாஸனத்தைக் குறித்து உபாக்யானம் மைத்ரேயீ யாக்ஞவல்கிய ஸம்வாதம் ஜனக யாக்ஞவல்கிய ஸம்வாதம் முதலிய உபாக்யானங்களை விஸ்தாரமாகச் சொல்லி தைத்திரீய சுருதியில் அனுபவத்தில் தெரியும்படியான மனுஷ்யானந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதைப் படிப்படியாக விருத்திசெய்துகடைசியாக குறிக்கப்பட்டிருக்கும் பிரம்மானந்தமே ஆத்மானந்தமென்றும் அதுவே நமது பரம லக்ஷ்யமென்றும் மூன்று தினங்களும் வெகு அருமையாக உபன்யசித்தார்கள். உபன்யாசங்களுடையு

முடிவில் காரியதரிசியால் ஸங்கத்தை பூர்ணமாக அனுக்ரஹித்து வரும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய பாதகமலங்களில் அசேஷ மஹாஜனங்களுடைய நமஸ்காரங்கள் தெரிவிக்கப்பட்டும் மூன்று தினங்களிலும் வெகு அருமையான விஷயங்களை உபதேசம்செய்த சாஸ்திரிகள் அவர்களுக்கும் உபன்யாசங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்த கும்பகோணம் அத்வைத ஸபையாருக்கும் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபை அன்று கலைந்தது.

N. சாம்பசிவய்யர்

## ஸ்ரீ ராமநவமி உத்ஸவம்.

பனையப்பட்டியில் ஸ்ரீஸனாதன தர்மஸம்வர்த்தினீ ஸபையின் ஆதரவில் பனையப்பட்டி மஹாஜனங்கள் நாளது பிரமோதூதவருஷ பங்குனிமீ 15௳ சனிக்கிழமை ஸ்ரீராமநவமி உத்ஸவம் ஆரம்பம் செய்து ஷை மீ 24௳ திங்கள்கிழமை உத்ஸவம் இனிது பூர்த்தி ஆயிற்று. தினம் லோகக்ஷேமார்த்தம் மஹாஜனங்களின் க்ஷேமார்த்தம் ஆஸ்திகத்தின் அபிவிருத்யர்த்தம் ஸ்ரீராமப் பிரஸாத ஸித்யர்த்தம் என்று ஸங்கல்பம் செய்து கொள்ளுகிறது. மஹாஜனங்களில் ஒவ்வொருவர் ஒருநாளை உபயமாக நிவேதனாதிகள் நடத்தினார்கள். உத்ஸவப் பூர்த்தியன்று எல்லாருமாக சேர்ந்து ஸமாராதனை நடத்தினார்கள். உத்ஸவ ஸமாப்த்தியன்று ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் ஸீதாவிவாஹகட்டம் வெங்கடேசய்யர் வாசித்து அர்த்தம் சொன்னார்.

பிரதிதினம் பிரம்மஸ்ரீ பாகவதர் சுந்தரமய்யரவர்கள் உத்ஸவ பத்ததி பஜனை முதலியவைகளை வெகு விமரிசையாய் நடத்தி வைத்தார்கள். மறுநாள் பக்தோத்ஸவம் ராத்திரி படம் பட்டணப் பிரவேசம் பஜனை வேதபாராயணம் நடந்தது. வருகிற பிரஜாபதி-வருஷ சித்திரைமீ 5௳ சனிக்கிழமை ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம் ஆரம்பம் செய்து ஷை மீ 9௳ புதன் கிழமையன்று பூர்த்தி செய்வதாய் மஹாஜனங்கள் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். ஸபை பிரஸிடெண்டு பிரம்மஸ்ரீ ராமஸ்வாமிஅய்யர் முதலானவர்களும் வந்திருந்தார்கள்.

வெங்கடேசய்யர்.

## கும்பகோணம் த்வைதாத்வைத விசாரஸபையின் முடிவு என்ன?

———0———

இந்த ஸபை முடிவுற்றதைப் பற்றி ஹிந்து முதலிய சில பத்திரிகைகளில் மாறான சிலவிஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. உண்மையோ தெரியவில்லை. அத்வைதியோ, த்வைதியோ எவ்வளவு உண்மையாக எழுதினாலும் ஒரு பக்ஷம் பேசுவதாகவே ஜனங்கள் நினைப்பார்கள். ஆகையால் இந்த விஷயத்தில் வைஷ்ணவர்களுடைய வார்த்தைகள் தான் நம்பக்கூடியது. ஸ்ரீ. உப அக்னிஹோத்ரம் கோபால தேசிகாசாரியார் அவர்கள் மூன்று ஜட்ஜிகளுக்குள் ஒருவர் என்று அறிகிறோம். பண்டிட் ஆர். வி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் அவ்வப்போது தமிழ் தர்ஜிமா செய்ததும் யாவருமறிந்தவிஷயம். ஆகையால் இவ்விருவரும் கடைசிதினத்தில் நடந்த விஷயங்களையும் ஸபை முடிவுற்றதன் காரணங்களையும் ஸ்பஷ்டமாய் இந்த ஆரியதர்மத்தில் வெளியிடும்படி பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ ஸ்வாமிகள், ஆதிநோட்டீஸில் வெளிப்படுத்தியபடி விசாரணையில் கலந்த எந்தப் பண்டிதருக்காவது 50 ரூ ஸம்மானம் செய்ததுண்டா?

உண்மையறிய விரும்புவோர்

---

# இது தான் நல்ல வழி.

கும்பகோணத்தில் நடந்த த்வைதாத்வைத விசாரஸபை திடீரென முடிவுபெற்றதைப்பற்றி ம-கா-ரா-ஸ்ரீ வக்கீல் நரஸிங்கராவ் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தை நான் காணநேர்ந்தது. ஏதோ ஒரு விஷயத்தில் முன்னமே ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னாரா இல்லையா என்பதில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டதாயும், முன்னமே தாம் சொல்லியிருப்பதாய் ஸ்ரீ ஸ்வாமிகள் ருஜுச்செய்துவிட்டதாயும், அதனால் கோபமடைந்த அத்வைதிகள் எழுந்துபோய்

விட்டதாயும், அந்தப்பிரசுரத்தில் கண்டிருக்கிறது. இது உண்மை கலந்த தவறு. ஸ்ரீ ஸ்வாமிகள் தாம் ஏதோ முன்னமே சொல்லியிருந்ததாக ஒரு ஸஞ்சிகையிலிருந்து சில வாக்கியங்களை வாசித்துக் காட்டிய பிறகுகூடக் கல்க்கத்தா A. K. சாஸ்திரியார் "இது வேறு விஷயம். இப்பொழுது செய்தது ப்ரதிஜ்ஞாந்தம் தான்" என்று சொல்லிக்கொண்டே "இனி இத்தகைய அவ்யவஸ்தையில் தனக்குத்தலையிட விருப்பமில்லை" என்று உரக்கப்பேசியே வெளியேறி விடவில்லையா?

ஒருவர் மறதியால் முன் சொல்லவில்லை என்றாலும் மற்றவர் ருஜுப்படுத்த வேண்டியது கடமைதானே. இதனால் என்ன ஜயம்? கல்கத்தா சாஸ்திரியார் ஸபையின் ஆரம்பத்தில் ஸ்ரீஸ்வாமிகள் முதல் நாள் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் கண்டித்துக்கம்பீரமாகப் பேசவில்லையா? ஸ்ரீஸ்வாமிகள் வழக்கப்படி உடனே பதில் சொல்லவேண்டியது தானே. அப்படிச் செய்யாமல், சாஸ்திரிகளைப் பார்த்து "என்ன என்ன விஷயங்கள் சொன்னீர்கள்" என்று ஸ்ரீஸ்வாமிகள் கேட்கக் காரணம் என்ன? "ஸ்ரீஸ்வாமிகள் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் கண்டித்துப் பேசினேன்" என்று சாஸ்திரியார் ஸபைநடுவில் பலரும் கேட்கப் பதில் சொல்லவில்லையா? அப்பொழுதாவது ஸ்ரீஸ்வாமிகள் பதில் சொல்லத் தொடங்க வேண்டாமா? அப்படிச் செய்யப்படவில்லையே. அத்வைதிகள்போனபிறகாவது ஸபையில்ஸ்ரீஸ்வாமிகள் பதில் சொல்லவேண்டாமா? இன்றுவரை ஸ்ரீஸ்வாமிகள் அவைகளுக்குப் பதில் சொன்னதாகத் தெரியவில்லையே.

இந்தக் கும்பகோணத்தில் ஏற்பட்ட அநுபவத்திலிருந்து ஸ்ரீஸ்வாமிகள் இனி "அத்வைதம் அவைதிகம்" என்கிறபேச்சையே எடுக்கமாட்டார் என்றும் இனி வீண் ஆடம்பரமாக ஸபை கூட்டமாட்டார் என்றும் எங்கும் உலாவும் வதந்தி உண்மையாகவே இருக்கும்படி ஸ்ரீ ஆராவமுதன் கிருபை செய்வாராக.

ஒரு வைஷ்ணவ பண்டிதன்.

---

# வார விருத்தாந்தம்.

இந்தியரிடம் கற்கவேண்டும்:- அமெரிக்க நாட்டுபேர் பாங்க்ஸ் என்ற நடிகர் பாரதநாட்டைச் சுற்றிப்பார்த்து நாடகத்திலும் மற்றெல்லா விஷயங்களிலும் அன்னியர் கற்கவேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன என்று போற்றுகிறார். நம் நாட்டவரோ நமது ஸதாசாரத்தை அனுஷ்டிக்கக் காரணம் யாது? பயன் என்ன? எனக்கேழ்க்கின்றனர். காரணமின்றி அன்யரைப்போல் நடையுடை ஆஹார வேஷங்களில் நடிக்கின்றனர். ஸம்ஸ்கிருதம் உபநிஷத் முதலியன பிறந்தது இந்நாட்டிலே இதையுங் கற்க அன்யநாடு போகவேண்டுமாம். அங்கு சென்று திரும்பியவர் காசி கயைக்குப் போய்வந்தவர்போல் கருதப்படுகின்றனர். எவரைச் சொல்வது? தனது சுத்த புத்தி நித்யமுத ஸ்வரூபத்தை மறைத்து பற்பல துன்பங்களை அனுபவிக்கும்படி ஜீவனை மாயை ஆட்டிவைப்பதுபோல் எல்லாத்துறையிலும் சிறந்த பாரதநாட்டை மேனாட்டுநாகரீகமெனும் மாயை ஆட்டிவைக்கிறது.

*   *   *   *   *   *   *   *

ஸீதை மேடைமீதேறிப் பேசினளா? 6-ஆ காலே பாம்பேயிலுள்ள தென்னாட்டுப் பெண்களுக்கு தலைவர் உபந்யாஸம் செய்யும்போது ஸீதையை திரௌபதியை மேற்கோளாகக் கொள்ளுங்கள். அன்யவஸ்துபஹிஷ்காரத்திற்கு ஆண்மக்களுடன் வாருங்கள். புருஷர்கள் அன்யவஸ்து வாங்கினால் சமைத்துப்போடாதீர்கள் என உபதேசித்தனர். இவர்கள் பேச்சிலிருந்து ராமாயணம் பாரதம் கேளாத தற்காலத்துப்பெண்கள் ஸீதை இக்காலத்தவளைப்போல்தானிருந்தாள் என்றல்லவோ நினைப்பர். இளமையில் ராமாயணாதிகளைக் குழந்தைகளுக்கு நன்று கற்பித்தால் பிழைத்தோம்.

*   *   *   *   *   *   *   *

ஜிக்ஞாஸை. இயற்கையாகவே மனிதருக்கு எதையுமறிய வேண்டுமென்றாசை உண்டு. விஷயமேயில்லாமல் பத்துபேர் ஓரிடத்தில் சேர்ந்திருந்தால் அவ்வழி வந்தவன் என்ன வேலையா

யிருந்தாலும் நமக்கென்னவென்று போவதில்லை. என்ன என்ன கூட்டம்? என விசாரிப்பான். இதை நல்வழியான பிரவிருத்தி மார்க்கத்திலும் நிவிருத்திமார்க்கத்திலும் செலுத்தும்படி முறையே பூர்வோத்திரமீமாம்ஸை கூறுகிறது. ஹிமயமலையின் உச்சியில் என்ன இருக்கிறதென்ற ஜிக்ஞாஸை பலநாளாக மேனாட்டை ஆட்டிவருகிறது. பலமுறை பிரயத்நம் செய்தும் பயன் பெறவில்லை. 6போடங்கிய ஓர் கோஷ்டி கிளம்பி உயரே செல்கிறது. அது எப்படியிருந்தாலும் ஆத்மஜிக்ஞாஸையைக் கொண்டோர் தான்ஸ்வாராஜ்யம் பெறுவார்.

* * * * * * * *

எங்களவர்கடித்தால் இப்படித்தான் என ஓர் நாக்குப்பூச்சி பாம்பு கடித்து இறந்தவனைத் தூக்கிச்செல்பவரிடம் கூறியதாம். ஈழுவர் தங்கள் ஸ்வாமியை யானைமீது வைத்து 1௨ கொச்சியில் ஊர்வலம் வந்தனர். ஆங்குள்ள சர்ச்சில் கிருஸ்தவர்கள் பிரார்த்தனை நடத்தினதைக்கண்டு இவர்கள் வாத்யத்தை நிறுத்திச்சென்றனராம். அப்படியிருந்தும் அத்தெரு பூராவாக வாத்யங்கூடாதென விக்ரஹத்தைப் பாழ்படுத்திப் பலரை அடித்து கிருஸ்தவர் ஹிம்ஸித்தனராம். இவர்கள் சீமையிலிருந்து வந்தவரல்ல, ஏசு தர்மமும் அப்படியல்ல, ஆயினும் தானும் கிருஸ்தவர், அரசாங்கமும் கிருஸ்தவரைச் சார்ந்ததென கர்வத்தால் செய்த தீச்செயல். நடுநிலை வஹிக்கவேண்டிய அரசாங்கம் இதற்கு இடமளிக்கலாகாது. இவர்களும் தன் நிலையை நன்கு யோசித்து கர்வத்தைக் களையவேண்டும்.

* * * * * * * *

தநகர்வம் படைக்காதே. சாத்தூரில் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த இரண்டு பெண்கள் ஓர் நாடாரைத் துடப்பத்தாலடித்து கேஸ் நடக்கிறது. தாங்கள் கோர்ட்டுக்கு வாராதபடி செய்த யத்னங்களெல்லாம் வீணாயிற்று. அதுபலித்தாலும் பாமனது சிக்ஷையை எப்படி பரிஹரிப்பது? பணப்பெருமை படைத்தால் பற்பல துன்பம் நேரும்.

* * * * * * * *

தடியடிக்கு ஏற்பாடு. தூத்துக்குடியில் நடந்த ஓர் ஸபையில் 'சூத்ரனென்றால் தடியாலடி' என சொட்டை எழுத்தில் அட்டை

தொங்கவிடப்பட்டனவாம். முன்னொருவர் பிரதிதினமும் ஓர் பிராமணசிசுவைக் கொல்லவேண்டுமென தூண்டினார். ஜாதித் வேஷத்தைக் கிளப்புவோரை சிக்ஷிக்கும் அரசாங்கசட்டம் இவ்விஷயத்தில் துருபிடித்து ஆங்கிலேயரை இந்தியர் சொன்னால் நல்ல வேலை செய்கிறது. பிராமணர்கள் தன் தர்மத்தை விடாமலிருந்தால் யாதொரு பயமுமில்லை. காலத்திற்கேற்றபடி மரியாதையாக மற்றோரை நடத்தவேண்டும். ஆயினும் அரசாங்கம் கடமையைக் கைவிடலாகாது.

* * * * * * * *

பெண் ஆண்போலானால் வீடு அழியும் என ஓர் பழமொழி உண்டு. அவர்கள் கிளர்ச்சி வலுத்துவருகிறது. தேசத்தின் கதி என்னமோ அறியோம். சென்னை மாதர்சங்கத்திலிருந்து ஸர்வ கக்ஷிமஹாநாட்டில் தாங்கள் பிரதிநிதியாக அழைக்கப்படவேண்டும். சமசுதந்திரம் வேண்டுமென பெரும் மகஜர் ராஜப்ரதிநிதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தற்கால தலைவருமிதை ஆமோதிக்கின்றனர். இதன் முடிவு நாட்டின் முடிவெனத்தரும். தனக்கே நேரும் துன்பத்தைக் கவனியாமல் பெண்கள் துராசாரப்பேயால் இழுக்கப்பட்டு கண்மூடி வெகுதூரம்செல்கின்றனர். எச்சரிக்கை செய்வதைத்தவிர நம்மாலென்ன முடியும் ?

* * * * * * * *

விசித்ரநிலை. பரமாசார்யாள் 'மனதாலும் நினைக்கமுடியாத விசித்ரமானது இந்த ஜகத்' என்றார். இதை அநுபவத்தில் காண்கிறோம். ஓர்புரத்தில் ராமாயணம் மற்றோரிடத்தில் ராவணாயணம். ஜாதிஸபை—ஜாதியையழிக்கும் ஸபை, ஆஸ்திகர் ஸபை—நாஸ்திகர் மகாநாடு, அய்யர், அய்யங்கார்என சொல்லிக்கொள்ள வெட்கம். தகாதோர் தம்மை அப்படியழைத்தல், தாழ்ந்தவரை உயர்த்தல், உயர்ந்தவரைத்தாழ்த்தல், ஜீவகாருண்யம், மனிதனையேயடிக்க முயற்சி, மற்றும் பலபல விசித்ரம் பார்ப்போம். சென்ற வாரம் குலாலஸபை செட்டிஸபை நடந்தது. கவரநாயகர் ஸோமவம்ச யாதவரென தீர்மானம் செய்தது.

* * * * * * * *

ஆஹா! நல்ல ஆராய்ச்சி. 7உ காரைக்குடியில் நடந்த நாஸ்திகஸபையில் தலைவர் விச்வாமித்திரர் சுயமரியாதைக்காக போர்

புரிந்ததாகவும் புத்தர் இதை ப்ரசாரம் செய்ததாகவும் சரித்ரபூர்வ மான ப்ரமாணமெனக் கூறினர். ஆராய்ச்சியின் பெயரால் தன் தன் உள்ளத்தை அவரவர் வெளியிடுகின்றனர். சாத்தானும் வேதப்ரமாணங் கூறுமென்றபடி இவர் வேதபுராணங்களை நம்பா மல் அதையே ப்ரமாணமெனக் கூறுவது விந்தை. இவைபோன்ற வார்த்தைகளுக்கு மதிப்பேது ?

* * * * * * * *

தன்னையறியார். ஷ்டி ஸபைத்தலைவர் ஓர் இந்திய சட்டசபை அங்கத்தினர். வரும் ஸ்வராஜ்யம் மதத்தைச்சீர்திருத்தாவிடில் பய னில்லை என்கிறார். எல்லா தலைவர்களும் இதே எண்ணங்கொண்ட வர்களே. உலகமெனும் கடலில் தாங்களோர் துளி என இவர் கள் எண்ணுவதில்லை. தேசியவிஷயமான அற்பகாரியத்தைச் செய்யவே ஈச்வரஸங்கல்பமில்லாவிடில் இவர்களால் முடிவதில்லை. இவர்கள் மதத்தைச் சீர்திருத்தப்போகிறார்களாம். தாங்கள் கர் மானுஷ்டானத்தைவிட்டு கெடலாம், அண்டியவரைக் கெடுக்க லாம், ஆண்டவன் ஆணையை அணுவளவேனும் அசைக்கமுடியா தென உணர்வாராக.

* * * * * * * *

தீமையே அதிகம். சுதேசஸமஸ்தானங்களில் சில விஷயத் தில் பரோடா முன்னணியிலிருக்கிறதென்பதை நேயர் அறிவர். பாபுபாய்தேசாய் என்ற சட்டஸபை அங்கத்தினர் வரதக்ஷிணைக் கொடுமையையொழிக்க ஓர் சட்டம் கொண்டுவருகிறார். 6-மாத சிக்ஷையும் 500-ரூபா அபராதமும் வரதக்ஷிணை பெற்றோருக்கு சிக்ஷையாம். எப்பாடுபட்டாவது இதையகற்றில் பல ஏழைகள் சுகப்படுவர். இச்சட்டத்திற்கு இடமளித்தால் மதவிஷயமான மற்றதற்கும் இடந்தந்ததாகும். நவநாகரீகங்களையெல்லாம் நம் தலையில் சுமத்துவர். ஆகையால் நன்மையும் வேண்டாம். பின் வரும் தீமையும் வேண்டாமென்பதே உசிதம்.

* * * * * * * *

சேற்றிலுமோருகால். திருநெல்வேலியில் கூடிய சைவஸபை யார் ச்ருதி ஸ்ம்ருதி புராணாகமங்களையும் ஆதரிக்கின்றனர். தற் காலநாகரீகச்சேற்றிலும் கோயிலில் தாஸி நர்த்தனம் கூடாது,

பால்யவிவாஹம் கூடாதெனக் கூறி காலை வைக்கின்றனர். பாஹ்யாங்கமான ஆகமோக்த தாஸிவிஷயத்தைவிட வைதிகமான விவாஹத்தில் இவர்கள் தலையிட்டதுதான் அநுசிதம். மதமெனுமாற்றிலும் நாகரீகசேற்றிலும் காலை வைத்துத்தவிக்கின்றனர் பாவம்!

* * * * * * * *

வாழ்க. மூன்றுண்டுகளுக்குமுன் பரமாசார்யாளது ஆணையின்படி தர்மப்ரசாரம்செய்யும்போது சைதாப்பேட்டையில் அடியேன் வேண்டியபடி சில ஸ்ரீவைஷ்ணவாஸ்திகர்கள் ஸத்வித்யாலயமெனப் பெயர் வைத்து 20-மாணவர்களுக்கு உபயுக்தமான ஸந்த்யா உபநிஷத் காவ்யம் திருவாய்மொழிகளையும் கற்பிக்கின்றனர். ஸ்ரீமான் கே. பாலசுப்ரமண்யய்யர் தலைமையில் மூன்றும் ஆண்டு விழா நடந்தது. அது ஓங்கி விளங்குக. ஏனைய ஊரார் கவனிக்க.

* * * * * * * *

யார் புகழ்ந்தென்ன ? மைசூர் ஸம்ஸ்கிருத கலாசாலை பண்டிதர்கள் திவானுக்கோர் உபசாரபத்திரமளித்தனர். வடமொழியில் வல்லவர் மிர்ஸா இஸ்மேல் என்ற மஹம்மதியர் திவான் இதற்கு பதிலருளும்போது கீர்வாணபாஷையையும அதிலுள்ள நூல்களையும் வாயாரப்புகழ்ந்தார். இவர்மாத்திரமா ? இன்னும் எத்தினையோ அன்யநாட்டு, அன்யமதத்தினர், போற்றுகின்றனர். இதை கற்கவேண்டியவர்களோ ஷேக்ஸ்பியர் ரைனல்ஸ் முதலியவைகளைக் கற்றுப் புகழ்கின்றனர். அவை அணுவளவேனும் அடுத்த உலகிற்கு பயன்படா. ஒழிந்தவேளையில் கிஞ்சித்தேனும் இதைக் கற்று பிறப்பைப் பயனுற்றதாக்குக.

* * * * * * * *

இதுவன்றோ கடமை. அப்துல்கலாம் அஸாத் என்ற மஹம்மதியர் கொழுத்த தேசியவாதி. தங்கள் மதம் பால்யவிவாஹத்தை ஏற்காது. என்னிஷ்டமும் வயதானபிறகு விவாஹம் வேண்டுமென்பதே. ஆயினும் பகுஜநங்கள் எதிர்ப்பதால் சாரதாசட்டத்தை எதிர்க்கிறேன். புதிதாக வரும் ஸபையும் பகுஜநவிரோதமான சட்டத்தைச் செய்யக்கூடாதென்றார். இந்த கடமையை இந்தியர் கவனிக்கட்டும்,

இங்குமா தொல்லே? மைசூர் ஸமஸ்தானம் கொஞ்சம் கர்ணுடகவழியைச் சார்ந்தது. அங்கும் ஒருவர் சாரதாசட்டத்தைக் கொண்டுவர பகீரத் ப்ரயத்நம் செய்கிறர். மஹிஷாசுரபுரமெனும் ஆங்கு பெண்மக்கள் சக்தி ஒங்கியிருப்பது ஆச்சரியமல்ல. 16-வயதானபிறகே பெண்களுக்கு கல்யாணம் வேண்டுமென பெண்கள் கூறுகின்றனர். மஹாராஜாவும் மநதுவைத்து சட்டசபை அங்கத்தினரும் முயற்சித்தால் இத்தொத்துநோயங்கு பறவாது.

* * * * * * * *

கருப்பு துரைகள். மந்திரி முதலிய பதவி கிடைத்தவுடன் ஊரூராக சுத்தி உபசாரம் பெற்று வெள்ளிசாவி தங்கசொல்லூரு இவைகளைக்கொண்டு புதுகட்டடத்தைத் திறந்து அஸ்திவாரக்கல் நாட்டி குறைகள் கூறப்படின் கவனிப்போமென கழுத்தும் மாலையுமாய் ஊர் செல்கின்றனா. அவர் எக்கேடு கெட்டால் நமக்கு என்ன? விருந்தளிக்கும் ப்ராந்தர்களையன்றோ குறைகூறவேண்டும். இவர்கள் களிக்கூத்து பல ஜாதியர் ஒன்றுகூடி உண்டு தர்மத்தை கெடுக்கிறது. 8உ புதுச்சேரியில் ஐரோப்பியமுறையில் சென்னை மந்திரிகள் விருந்துண்டாராம். சரீரத்தையும் வெள்ளையாக்கி துரையாக பலர் முயற்சிக்கின்றனர். இவர்கள் செயல் தார்வின் ஸித்தாந்தத்திற்கு உதாஹரணம்போலும்.

* * * * * * * *

ஸநாதன தர்மஸபை. 24உ முதல் 4-நாள் பெஷாவாரில் அத்தேசத்திய ஸ்ரீ சங்கராசார்யர் தலைமையில் ஷெ ஸபைகூடும். ப்ரபலமான வரவேற்பு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா.

---

## பிழைதிருத்தம்.

குறிப்பு:— 9-4-31உ யுள்ள நமது ஆர்யதர்மம் ஸஞ்சிகையில் 258-வதுபக்கத்தில் 17-வது வரியில் 'உலகமே புகழும்' என்பதை 'உலகமே புகலும்' என்று திருத்திக்கொள்ளவேனும். உலகமே புகலும் என்ற வார்த்தைகளுடன் அந்த வாக்கியமும் முடிவடைகிறது.